## செலவு:

**வருவாய்ச் செலவு:**

- அரசின் தினசரித் தேவைகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் செலவுகள் வருவாய்ச் செலவுகள் ஆகும்.
- இம்மாதிரியான செலவுகள் வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கு வதில்லை.
- இவை ஒரு வழிப் பணப் பரிமாற்றம் ஆகும். (எ.கா)
  - வட்டி செலுத்திய தொகை
  - இராணுவம் மற்றும் காவல்துறைக் கான செலவுத் தொகை
  - அரசு வழங்கும் மானியம்
  - மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசுப் பகுதிகளுக்கான நிதி
  - ஓய்வூதியம் மற்றும் ஊதியம் வழங்கிய தொகை

**மூலதனச் செலவு:**

- இது பொதுவாக, நிரந்தரச் சொத்துக் களை உருவாக்கும் செலவுகள் மற்றும் தொடர் வருமானத்தை தரும் சொத்துக்களை உருவாக்கும் செலவுகள் மற்றும் மாநில அரசுகள் மற்றும் பஞ்சாயத்து நிர்வாக அமைப்புகளுக்கு அளிக்கப்படும் கடன்கள் மூலதனச் செலவுகள் என்றழைக்கப்படுகின்றன.

## பொது நிதிக் கொள்கையின் உள்ளடக்கங்கள் (Subject Metters)

1. பொதுச் செலவு (Public Expenditure)
2. பொது வருவாய் (Public Revenue)
3. பொதுக் கடன் (Public Debt)
4. நிதிநிர்வாகம் (Financial Administration)
5. கூட்டாட்சி முறை (மத்திய-மாநில நிதி உறவுகள்) (Federal Finance)

**I. பொதுச் செலவு**

- நவீன அரசு ஒரு நல அரசு (Welfare State) எனவே அதிகபட்ச பொது நலத்தை நிலைநாட்ட அரசு பலவிதமான பணிகளை மேற்கொள்ளும். இதனால் அரசுக்கு பணச் செலவுகள் ஏற்படும். இத்தகையான பொதுச் செலவு எனப்படும்.

**2. பொது வருவாய்:**

- அரசு பெறுகின்ற வருவாய் பொது வருவாய் எனப்படும். இது வரி வருவாய், வரி அல்லாத வருவாய் ஆகியனவற்றை உள்ளடக்கியது.
- வரி வருவாய் என்பது பலவகையான வரிகள், வரித் தாக்கம் (Impact) மற்றும் வரி நிகழ்வுகள் (Incident) பற்றியதாகும்.
- வரியில்லாத வருவாய் என்பது

1. வணிக வருவாய் (பொதுத்துறை யின் விற்பனையால் கிடைத்த வருவாய் மற்றும் இலாபம்)
2. நிர்வாக வருவாய் (கட்டணங்கள், அனுமதிக் கட்டணங்கள், சிறப்புத் தீர்வைகள்)
3. வெகுமதி மற்றும் மானியங்கள்.

## 3. பொதுக் கடன்

- அரசின் வருவாயானது செலவினங் களை விட குறையும் போது அரசானது உள்நாடு மற்றும் வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்க உந்தப்படுகிறது.
- உள்நாட்டுக் கடன் என்பது அரசு பொது மக்களிடமிருந்தும், வணிக வங்கிகளிட மிருந்தும், மைய வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுவதாகும்.
- வெளிநாட்டுக்கடன் என்பது அரசு, உலக வங்கி (World Bank), பன்னாட்டு நிதி நிறுவனம் (IMF – International Monetary Found) மற்றும் அயல் நாடுகளிடம் இருந்தும் பெறுகின்ற கடனாகும்.

### 4. நிதி நிர்வாகம்

- அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் மற்றும் அரசின் இயந்திரங் களோடு சார்ந்த நிதி நடவடிக்கைகளே நிதி நிர்வாகமாகும். மேலும் வரவு-செலவு திட்டங்களை வடிவமைத்தல், உருவாக்குதல், ஒப்பளித்தல், மற்றும் பாராளுமன்றம், சட்டமன்றங்களில் தாக்கல் செய்தல், தணிக்கை செய்தல், நடைமுறைப் படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கும்.

### 5. கூட்டாட்சி நிதி

- பொது நிதியின் ஒரு உட்பிரிவே கூட்டாட்சி நிதியாகும். கூட்டாட்சி என்பது இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட அரசுகளின் கூட்டமைப்பு. இதில் மைய, மாநில மற்றும் உள்ளூர் அரசுகள் ஒருங்கினைந்துள்ளன. இது இவ்வரசுகளிடையே நிலவுகிற நிதி உறவு முறைகள் பற்றியும், அதனுடன் சம்பந்தமுடைய பிரச்சனைகள் பற்றியும் ஆராய்கிறது.




## ஆண்டு நிதிநிலை அறிக்கை

**(The Budget)**




- இந்தியாவில் நிதித்துறை அமைச்சகம் நாட்டின் நிதிக் கொள்கையை (Fiscal Policy) முடிவு செய்கிறது. பட்ஜெட் எனப்படும் ஆண்டு வரவு செலவு அறிக்கையே நாட்டின் நிதிக் கொள்கைக்கு எடுத்துக்காட்டும் முக்கிய அம்சமாகும்.
- பட்ஜெட்டுக்கு முந்தைய நாள் மார்ச் 28 அன்று நிதி அமைச்சகம் முந்தைய நிதி ஆண்டின் பொருளாதார ஆய்வு அறிக்கையை (Economic Survey) வெளியிடுகிறது. ஒரு நிதியாண்டு என்பது ஏப்ரல் 1 முதல் மார்ச் 28 வரை உள்ள காலகட்டமாகும்.
- பட்ஜெட் என்ற சொல்லானது பிரெஞ்சு மொழி சொல்லான "Bongette" என்ற சொல்லிலிருந்து உருவானது. இதன் பொருள் "சிறிய பை" என்பதாகும். பாராளுமன்றத்தில் (மாநில சட்டமன்றத்திலும்) வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்ய நிதி அமைச்சர்கள் அறிக்கையை இதில் வைத்துதான் கொண்டு செல்வார்கள். இதில் அரசின் நிதிக் கொள்கைகள், வரிக் கொள்கைகள், மூலதன பிறப்பிடங்கள், சேமிப்பு

அளவுகள், வளங்களின் பயன்பாடுகள் மற்றும் மூலதன ஆக்கங்கள் பற்றிய விளக்கங்கள் இடம்பெறும்.

**பற்றாக்குறை**

- செலவிற்கும் வரவிற்கும் இடையேயான இடைவெளி பற்றாக்குறை எனப்படுகிறது.
- பல்வேறு வகையான பற்றாக்குறைகள் உள்ளன. அவை,

1. மொத்த பற்றாக்குறை = மொத்த செலவு - மொத்த வரவு
2. வருவாய் பற்றாக்குறை = வருவாய் செலவு - வருவாய் வரவு
3. நிதிப் பற்றாக்குறை = மொத்தச் செலவு - (கடன் மற்றும் இதரக் கடப்பாடுகள் தவிர்த்த மூலதன வரவு + வருவாய் வரவு)
4. முதன்மைப் பற்றாக்குறை = நிதிப்பற்றாக்குறை - வட்டிச் செலவு
5. பணமாக்கப்பட்ட பற்றாக்குறை = இந்தியாவின் இருப்பு வங்கிகளிடமிருந்து வாங்கிய கடன் + இருப்பிலிருந்து எடுத்த தொகை

## பட்ஜெட்:

### வரவு செலவு திட்டத்தின் வகைகள்: (Kinds of Budget)

1. சமநிலை வரவு-செலவு திட்டம் (Balance Budget) (இதில் அரசின் வருவாயும் செலவும் சரியாக இருக்கும்)
2. சமனற்ற வரவு-செலவு திட்டம் (Unbalanced Budget) (இதில் அரசின் வருவாய் செலவை விட அதிகமாகவே (அ) குறைவாகவோ இருக்கும்)

- சமனற்ற வரவு செலவு திட்டத்தில் பொது வரவை விட பொது செலவினங்கள் குறைவாக இருந்தால் அது "உபரி வரவு-செலவு திட்டம்" எனவும், பொது வரவைவிட பொது செலவினங்கள் அதிகமாக இருந்தால் அது "பற்றாக்குறை வரவு-செலவு திட்டம்" எனவும் அழைக்கப்படும்.
- நவீன பொருளியல் வல்லுநர்கள் சமனற்ற வரவு-செலவு திட்டமே நாட்டின் பொருளாதாரம் சமநிலையை அடையவும் அந்நிலையை தொடரவும் உதவும் என கருதுகின்றனர்.

### வருவாய் வரவு-செலவு திட்டம் (Revenue Budget)

- அரசின் வருவாய் வரவுகளும் அவற்றிலிருந்து செய்யப்படும் வருவாய் செலவுகளும் அடங்கும். சொத்தினை உருவாக்காத அத்தனை செலவினங்களும் வருவாய் செலவினம் என்று அழைக்கப்படும். (எ.கா) அரசுத்துறை சார்பான செலவுகள், நடப்பு வருவாயும் செலவினங்களும், அரசின் பொதுக்கடன் மீதான வட்டி மற்றும் வளர்ச்சி சாரா செலவினங்கள்)

